செ.வெ.எண் -11 நாள்:08.01.2018

**அரியலூரில் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திங்கட்கிழமை **"மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (08.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, தொகுப்பு வீடுகள், திருமண நிதியுதவி திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய **385** மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், அரியலூர் வட்டம், அரியலூர் பட்டுநூல்காரத் தெருவைச் சார்ந்த பானுமதி, க/பெ.காந்தி என்பவர் மகன் சதீஸ்குமார் என்பவர் 2016-17ஆம் கல்வியாண்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1176 மதிப்பெண்கள் பெற்று அரியலூர் மாவட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார். அவருடைய மேற்படிப்பிற்காக உதவித்தொகை கோரியிருந்தார். மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அளிக்கப்பட்டிருந்த கோரிக்கையின்படி, தலைமை பொது மேலாளர் ஜெயராம் கல்வி அறக்கட்டளை, அரியலூர் நிறுவனம் மாணவனின் மேற்படிப்பிற்கு அவரது பெற்றோரிடம் **ரூ.10,000/-க்கான** காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

பின்னர், மாற்றுத்திறனாளிகள் வரிசையில் காத்திருக்காமல், அவர்களுக்கான தனி இருக்கையில் அமர்ந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்று இம்மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலருக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புதிட்டம்) ஜெ.பாலாஜி, ஜெய்ராம் கல்வி அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் தினகரன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.